மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், போளூர், திருவண்ணாமலை மாவட்டம்.

2021 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 1ம் நாள் வியாழக் கிழமை

1873ம் ஆண்டு 11ஆவது ஏற்பாட்டின்படி திருமதி.வி.லட்சுமி, இளநிலை உதவியாளர் என்பவரால் ஆணையிட்டு உறுதி செய்யப்படுகிறது.

OS.No. 209/2014 வா.சா. 1 என்பவரின் வாக்குமூலம்

பெயர் .. பட்டம்மாள் வயது .. 76

க/பெ. .. முனுசாமி சாதி ..

01.04.2021 - வா.சா.1 குறுக்கு விசாரணை தொடர்ச்சி.

வீடு இல்லாதவர்களுக்குத்தான் பட்டா கொடுப்பார்கள் என்றால் சரிதான். என்னுடைய கணவருக்கு ஒருபட்டா கொடுத்தார்களா என்றால் முதலில் என் கணவர் பெயருக்கு ஒரு பட்டாவும் பிறகு எனது பெயருக்கு ஒருபட்டாவும் கொடுத்தார்கள். எனது கணவருக்கு ஒரு பட்டா தான் கொடுத்தார்கள் என்றால் சரிதான். என் கணவருக்கு கொடுத்த பட்டா எண்.243, சர்வே எண் நினைவில் இல்லை. எனது கணவர் பெயருக்கு கொடுத்த பட்டா எண்.237ல்

சர்வே எண்.308/9ல் தான் வீடு கட்டி அனுபவித்து வருகிறோம் என்றால் சரிதான். எனது கணவருக்கு உடல்நிலை சரியில்லாததால் எனது பெயருக்கு செட்டில்மெண்ட் எழுதி வைத்தார். மேற்கண்ட வீட்டிற்கு அருகில் சர்வே எண்.135/2ல் என்ற காலி இடத்தில் வாழை மரம் வைத்தும் குப்பைகள் கொட்டியும் செப்டிக் டேங்க் கட்டியும் அனுபவித்து வருகிறோம். பட்டா கொடுத்த நாள் முதல் இன்றுவரை ஆ அட்டவணை சொத்தை நாங்கள் தான் அனுபவித்து வருகிறோம். 1ம் பிரதிவாதி சாமிநாதன் என்பவர் நான் வழக்கு தாக்கல் செய்யும்போது ஊர்தலைவராக இருந்தார் என்றால் சரிதான். 1 முதல் 4 பிரதிவாதிகளுக்கும் எங்களுக்கும் எந்தவிதமான முன்விரோதமும் இல்லை என்றால் சரிதான். ஊரில் ஊர் பொதுமக்கள் சார்பாக மாவட்ட ஆட்சியர், தாசில்தார் ஆகியோகளுக்கு வழக்கு ஆ அட்டவணை சொத்தில் சாலை அமைத்து தர கோரி மனு செய்ததால் அதற்காக 1 முதல் 4 பிரதிவாதிகள் வந்ததால் தான்

அவர்களுக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்தேன் என்றால் ஏற்கனவே ஊரில் 3 தெருக்கள் உள்ளது. அதில் 3வது ரோட்டை பி.டி.ஓ. ஆபீஸ் மூலமாக தாசில்தார் மற்ற அலுவலர்கள் வந்து கிரையம் பெற்று அதில் தார் சாலை அமைத்து அந்த சாலை தேவிகாபுரம்ரோட்டில் சென்று சேர்கிறது. யாரிடம் ரோட்டிற்காக கிரையம் வாங்கினார்கள் என்றால் அந்த விவரம் எனக்குத் தெரியாது. சாமிநாதன் என்பவர் ஊராட்சிமன்ற தலைவர் என்பதால் தான் மேற்கண்ட பணியை செய்தார் என்றால் சரிதான். நான் ஊராட்சிமன்ற தலைவர் பெயரில் தான் வழக்கு தாக்கல் செய்திருக்க வேண்டும் என்றாலும் சாமிநாதன் என்பவர் பெயரில் வழக்கு தாக்கல் செய்திருக்கக் கூடாது என்றாலும்் சரியல்ல. சாமிநாதன் என்பவர் தான் எல்லா வேலைகளையும் செய்தார். ஆத்துரை கிராமத்திலிருந்து காந்திநகருக்கு எங்களது வீட்டிற்கு பக்கத்தில் உள்ள காலி இடமான ஏரிக்கரை வழியாகத்தான் சென்று வருகிறார்கள் என்றால் சரிதான். அந்த பகுதி முழுவதும் ஏரிக்கரை தான் என்றால் சரிதான். ஆத்துரை கிராமத்திலிருந்து தேவிகாபுரம் செல்லும் தார் சாலையானது இடையில் வழக்கு ஆ அட்டவணை சொத்து மற்றும் புளியமரத்தை தவிர்த்து 2 பக்கமும் தார் சாலை போடப்பட்டுள்ளது என்றால் சரிதான். நான் ஆட்சேபணை செய்ததால் வழக்கு ஆ அட்டவணை சொத்தில்தார் சாலை அமைக்கவில்லை என்றால் சரிதான். தாவா ஆ அட்டவணை சொத்தில் 1ம் பிரதிவாதி தலைவராக வந்த பிறகு தான் பொதுமக்கள் சென்று வந்தனர், அதற்கு முன்பாக யாரும் அந்த வழியில் செல்லவில்லை. ஏரிக்கரை நீர்பிடிப்பு பகுதி என்பதால் அதற்கு பட்டா வழங்கியது தவறு என்றாலும் எனது பெயரில் உள்ள பட்டா தவறுதலாக வழங்கப்பட்டது என்றால் சரியல்ல. அரசாங்கம் வீடு இல்லாத ஏழைகளுக்கு ஒரு பட்டா தான் வழங்குவார்கள் என்றாலும், ஒரே தேதியில் அ மற்றும் ஆ அட்டவணை சொத்திற்கு எனது கணவர் பெயருக்கு 2 பட்டாக்கள் வழங்கியது தவறு என்றாலும்் செல்லத்தக்கது அல்ல என்றாலும் சரியல்ல. ஒன்று எனது கணவர் பெயரிலும் மற்றொன்று என் பெயரிலும் உள்ளது. எனது பெயரில் உள்ள பட்டாவை இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். ஒரு குடும்பத்தில் ஒரு நபருக்குத்தான் பட்டா வழங்க வேண்டும் என்றாலும் ஒரே தேதியில் ஒரே குடும்பத்தில் 2

நபர்கள் பெயரில் நாங்கள் அரசாங்கத்தை ஏமாற்றி பட்டா பெற்றுள்ளோம் என்றாலும் சரியல்ல. தாவா ஆ அட்டவணை சொத்தில் பட்டா பெற்ற நாள் முதல் இதுவரை நாங்கள் வீடு ஏதுவும் கட்டவில்லை என்றால் சரிதான். பட்டா பாஸ்புக் சட்டப்படி பட்டா கொடுக்கப்பட்டதிலிருந்து 3 ஆண்டுகளுக்குள்ளாக அதில் வீடு கட்டப்பட வேண்டும் என்றாலும் அவ்வாறு கட்டாமல் போனால் அந்த பட்டா செல்லாமல் போய்விடும் என்பது விதி என்றாலும் சரியல்ல. தாவா ஆ அட்டவணை சொத்து சம்பந்தமாக ஊர் மக்கள் சார்பாக பெருமாள் வகையறா என்பவர்கள் எனக்கு எதிராக இந்நீதிமன்றத்தில் வழக்கு அ.வ.எண்.245/2014 என்ற வழக்கை தாக்கல் செய்துள்ளார்கள் என்றால் அந்த வழக்கு புறம்போக்கு இடத்திற்காகத்தான் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. தாவா ஆ அட்டவணை சொத்திற்காக அல்ல. வழக்கில் நான் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ.2 ஐ தவிர்த்து மற்ற ஆவணங்கள் அனைத்தும் தாவா அ அட்டவணை சொத்து சம்பந்தப்பட்டது என்றால் சரிதான். வழக்கு ஆ அட்டவணை சொத்தானது பல ஆண்டுகளாக ஊர் பொது மக்களால் பொது வழியாகத்தான் பயன்பட்டு வருகிறது என்றாலும் எனவே எனது வழக்கை தள்ளுபடி செய்ய வேண்டும் என்றாலும் சரியல்ல. ஊர் பொதுமக்கள் சார்பாக மாவட்ட ஆட்சியர், வட்டாட்சியர் ஆகியோருக்கு மனுக்கள் அனுப்பப்பட்டுள்ளது என்றாலும் நான் வழக்குதாக்கல் செய்துள்ளதால் நடவடிக்கை எடுக்காமல் இருக்கிறது என்றாலும் சரியல்ல.

(Sd)/-D.Ravi,
District Munsif,
Polur.